### மேட்டூர் - எம்.காளிப்பட்டி ஏரி தண்ணீர் பிரச்சினை : எடப்பாடி பழனிசாமிக்கு

# விவசாயச் சங்கங்கள் பாராட்டு நடத்துவது விந்தையாக உள்ளது!

## நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அறிக்கை!



சென்னை, நவ. 15 - மேட்டூர் எம்.காளிப்பட்டி ஏரிக்கு மட்டும் தண்ணீர் கொடுத்த எடப்பாடி பழனிசாமிக்கு விவசாய சங்கங்கள் பாராட்டு விழா நடத்துவது விந்தையாக உள்ளது'' என்று நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கூறியுள்ளார்.

இது குறித்து அமைச்சர் துரைமுருகன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

மேட்டூர் அணையின் வெள்ள உபரி நீரை சேலம் மாவட்டம் சரபங்கா வடிநிலத்தில் உள்ள வறண்ட ஏரிகளுக்கு நீரேற்றம் மூலம் நீர் வழங்கும் திட்டம்.

திட்டத்தின் நோக்கம்79 ஏரிகளுக்கு நீர் வழங்குவது. பணிகள் துவக்கப்பட்டது 6.5.2020. திட்டம் துவங்கப்பட்ட போது மதிப்பிடப்பட்ட தொகைரூ.565 கோடி.

திமுக அரசு பதவியேற்ற மே 2021க்கு முன் இடைப்பட்ட ஒரு வருட காலத்தில் இத்திட்டத்திற்கு 404.4 கோடி ஒதுக்கப்பட்டு செலவு செய்யப்பட்டது. இந்த 404.4 கோடியில், 33 கிலோ மீட்டர் நீளத்திற்கு இரும்பு குழாய்கள், மின் மோட்டார்கள், வால்வுகள், இதர உபகரணங்கள் வாங்க செலவிடப்பட்ட தொகை 312 கோடி.

இத்திட்டத்திற்கு 287 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட திட்டமிடப்பட்டது. அதில் 48 ஏக்கர் மட்டுமே அந்த ஓராண்டில் கையகப்படுத்தப்பட்டு இ.பி.எஸ் ஆட்சியில் எம். காளிப்பட்டி ஏரிக்கு மட்டுமே தண்ணீர் கொடுக்கப்பட்டது.

இத்திட்டத்திற்கான திருத்திய மதிப்பீடு ரூ.673.88 கோடி.

இத்திட்டத்தில் மேலும் மூன்று ஏரிகளுக்கு (செக்கான் ஏரி, கொத்திக்குட்டை, பி.என். பட்டி ஏரிகளுக்கு) நீர் வழங்க முடிவு செய்யப்பட்டது.

தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு, செலவிடப்பட்ட தொகை ரூ.252.96 கோடியில் மூன்று நீரேற்று நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டு, 27 மின் மோட்டார்கள் பொருத்தப்பட்டு, 33 கிலோ மீட்டருக்கு இரும்பு குழாய் பைப்கள் பதிக்கப்பட்டு இத்திட்டம் முழுமையாகச் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. நிலம் கையகப்படுத்துதலில், 270 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு இத்துறைக்கு நிலமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில், தற்போது வரை 56 ஏரிகளுக்கு தண்ணீர் வழங்க வழிவகை செய்யப்பட்டு, 40 ஏரிகளில் தண்ணீர்நிரப்பப்பட்டுள்ளது.

இத்திட்டம் முதலில் 100 ஏரிகளுக்கு நீர் வழங்கும் நோக்கில் பரிசீலிக்கப்பட்டாலும், அரசாணை வழங்கும் போது 79 ஏரிகளுக்கு மட்டுமே அரசாணை வழங்கப்பட்டது. 21 ஏரி பட்டா குட்டை என்பதால் அவை எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஆனால், எதையுமே தவறாகச் சித்தரிக்கும் எதிர்க்கட்சித் தலைவர் இந்த திட்டத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது, ஒவ்வொரு முறையும் 100 ஏரி என்றே தவறாகக் குறிப்பிடுகிறார்.

ஆக, அதிமுக ஆட்சியில் ஒரு வருட காலத்தில் இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகையில் ஏறக்குறைய 70 சதவிகிதம் செலவினம் செய்து 1 ஏரிக்கு மட்டுமே தண்ணீர் வழங்கப்பட்டது. இதர பணிகளை கருத்தில் கொண்டாலும், சுமார் 30 சதவிகித பணிகள் மட்டுமே செய்யப்பட்டிருந்தது.

மாறாக, திமுக ஆட்சிக்கு வந்த பின்பு மீதம் இருந்த 30 சதவிகித செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு சுமார் 70 சதவிகித பணிகள் முடிக்கப்பட்டு, இத்திட்டம் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

நிலைமை இவ்வாறு இருக்க, எம்.காளிப்பட்டி ஏரிக்கு மட்டும் தண்ணீர் கொடுத்த இ.பிஎஸ். அவர்களுக்கு இத்திட்டத்தையே முழுமையாகச் செய்து முடித்தது போன்று சித்தரித்து எம். காளிப்பட்டி விவசாய சங்கங்கள் பாராட்டுவிழா நடத்துவது விந்தையாக உள்ளது.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அறிக்கையில் கூறியுள்ளார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.11.2024) பல்லாவரத்தில் நடைபெற்ற, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம் பம்மல் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஜெயக்குமார், தாம்பரம் மாநகராட்சி பணிகள் குழுத்தலைவர் திருமதி சண்முகசுந்தரி ஆகியோரின் அன்பு மகள் த.ஜெ.கிருத்திகா – மருத்துவர் அருண்மொழித்தேவன் இணையரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

### மருத்துவர் பாலாஜியை நேரில் சந்தித்து ஆறுதல்!

# தாக்கிய இளைஞர் மீது சட்டப்படி நடவடிக்கை!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!

**சென்னை, நவ. 15 – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (13.11.2024) சென்னை கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் நோயாளியின் உறவினர் ஒருவரால் தாக்கப்பட்டதால், அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு தற்போது தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வரும் கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை மருத்துவர் பாலாஜியை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி நேரில் பார்வையிட்டு, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறியதுடன், முதலமைச்சர் அவர்கள் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து குடும்பத்தினரிடமும் மருத்துவர்களிடமும் தெரிவித்தார்.**

பின்னர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

இன்றைக்கு நமது கலைஞர் நூற்றாண்டு மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவில் பணியாற்றி வருகின்ற டாக்டர் பாலாஜி ஜெகந்நாதன் என்ற மருத்துவரை பெருங்களத்தூரைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கத்தியால் தாக்கியதில் அவர் பலத்த காயமடைந்து தற்போது தீவிர அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். கடந்த மே மாதம் முதல் அந்த இளைஞருடைய தாயார் இந்த மருத்துவமனையில் புற்றுநோய் பிரச்சனைக்காக இதே மருத்துவரிடம் சிகிச்சை பெற்று வந்ததாகவும், பின்னர் வேறு ஒரு தனியார் மருத்துவனைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார். அவரது தாயாருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சையில் பக்கவிளைவுகள் ஏற்பட்டது குறித்து சிகிச்சை அளித்த டாக்டர் பாலாஜி ஜெகந்நாதன் அவர்களை அந்த இளைஞர் ஏற்கனவே சந்தித்து கேட்டுள்ளார் என்றும் தெரிகின்றது.

இந்த நிலையில், இன்று மருத்துவமனைக்கு வந்த அந்த இளைஞர் டாக்டர் பாலாஜி ஜெகந்நாதன் அவர்களை கத்தியால் குத்தியி ருக்கின்றார். இப்போது அவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் கண்காணிப்பில் இருக்கிறார். தற்போது மருத்துவர் பாலாஜி அவர்கள் stableஆக இருக்கின்றார். இன்னும் இரண்டு, மூன்று மணி நேரத்திற்குள் சுயநினைவுக்கு வந்துவிடுவார். மேலும் இந்த சம்பவம் குறித்து முழு விசாரணை மேற்கொள்ளப்படும். இந்த சம்பவத்தில் ஈடுபட்ட அந்த இளைஞர் காவல்துறையினாரால் உடனடியாக கைது செய்யப்பட்டிருக்கிறார். இது மிகவும் வன்மையாக கண்டிக்கத்தக்க ஒரு செயல். இந்த செயலில் ஈடுபட்ட இளைஞர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவர்கள் அனைவர் மீதும் அக்கறை கொண்டது முதலமைச்சர் அவர்களின் அரசு. அவர்களுக்குத் தேவையான உரிய பாதுகாப்பினை கண்டிப்பாக, உறுதியாக வழங்கவேண்டும் என்று நமது முதலமைச்சர் அவர்கள் தெளிவாக இருக்கின்றார். கண்டிப்பாக சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

**பேட்டி!**

*கேள்வி:* தற்போது மருத்துவர் எப்படி இருக்கிறார்?

**துணை முதலமைச்சர் :** தலைப்பகுதியில் நான்கு இடங்களில் கத்தியால் குத்தப்பட்டு ஏற்பட்ட காயம், இடது கழுத்துப் பகுதிகளில் ஒரு காயம், இடது தோள்பட்டையில் ஒரு காயம், இடது காதுமடலில் ஏற்பட்ட ஒரு காயம். இதற்கெல்லாம் சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கிறது. மருத்துவர்கள் எல்லாம் உடன் இருக்கிறார்கள். அவருடைய குடும்பத்தார்கள் வந்திருக்கிறார்கள். குடும்பத்தினருக்கு ஆறுதல் சொல்லியிருக்கிறோம். அவருடைய தாயார், மனைவி (டாக்டர்) ஆகியோர் உடன் உள்ளனர். தொடர்ந்து கண்காணிப்பில் இருக்கிறார்.

*கேள்வி:* 6 மாதமாக சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கிறார்கள். அவருடைய தாயாருக்கு எந்த முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கிறது?

**துணை முதலமைச்சர்:** சரியான முறையில்தான் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்திருக்கிறது. தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றிருக்கிறார்கள். அந்த மருத்துவர் சொன்னதை வைத்து, காலையில் கூட இங்கு மருத்துவரிடம் அரை மணி நேரம் பேசியிருக்கிறார், உடன் நர்ஸ் இருந்திருக்கிறார்கள். என்ன காரணம் என்று தெரியவில்லை. தாக்குதலில் ஈடுபட்டவர் ஒரு தவறான முடிவை எடுத்திருக்கிறார். ஆனால் அவர் ஒரு சிறந்த மருத்துவர். (தாக்குதலால் சிகிச்சை பெற்று வரும் மருத்துவர்)

முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலின்பேரில், நம்முடைய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் அனைத்து மருத்துவ சங்கங்களுடன் மாலை 3 மணி அளவில் கூட்டம் நடத்தயிருக்கிறார். அனேகமாக மருத்துவ சங்கங்கள் இதனை புரிந்து கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

**தவிர்க்க முடியாத சம்பவம்!**

*கேள்வி:* பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து செல்லக்கூடிய நிலையில், இதுமாதிரி ஒரு சம்பவம் மருத்துவமனையில் நடந்திருக்கிறது. இதன் பாதுகாப்பு எப்படி என்பது குறித்து......

**துணை முதலமைச்சர் :** நீங்களே சொல்கிறீர்கள் பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து செல்கிறார்கள் என்று. இங்கே அந்த இளைஞர் விக்னேஷ் தொடர்ந்து 6 மாத காலமாக இந்த மருத்துவமனைக்கு அவருடைய தாயாரை அழைத்து வந்திருக்கிறார். அதனால், அவர் மீது எந்தவிதமான சந்தேகமோ வரவில்லை. அந்த மருத்துவருக்குக் கூட எந்தவித சந்தேகமோ, பயமோ வரவில்லை. தொடர்ந்து வந்து சிகிச்சைப் பெற்றிருக்கிறார்கள். தொடர்ந்து மருத்துவரிடம் தொடர்பில் இருந்திருக்கிறார். அதுவும் அரை மணி நேரம் மருத்துவரிடம் பேசிக் கொண்டும் இருந்திருக்கிறார். அதனால் இது தவிர்க்கமுடியாத சம்பவம். இனிமேல், இதுபோல நடக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

*கேள்வி:* மருத்துவனையில் இது போல ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. தொடர்ச்சியாக அவர் சொல்வது உண்மை இருக்கிறது என்று மேற்கோள் காட்டுகிறார். இது பற்றி....

**துணை முதலமைச்சர் :** இது தவிர்க்க முடியாத ஒன்று. இனிமேல் நடக்காமல் தடுப்போம். நான் ஏற்கனவே சொன்னதுபோல, விக்னேஷ் அவர்கள் 6 மாதமாக அவரது தாயாரை அழைத்துக் கொண்டு இங்கு வந்திருக்கிறார். இதே மருத்துவமனையில் அவரது தாயாருக்கு மருத்துவம் பார்க்கப்பட்டிருக்கிறது. அந்த மருத்துவரிடம் அரை மணி நேரம் பேசியிருக்கிறார். தனியார் மருத்துவமனைக்குச் சென்று அந்த மருத்துவர் சொன்னதை கேட்டு இந்த மாதிரி ஒரு முடிவை எடுத்திருக்கிறார். ஏதோ கோபத்தின் காரணமாக இந்த முடிவை எடுத்திருக்கிறார். ஆனால், கண்டிப்பாக சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். இனிமேல் நடக்காமல் பார்த்துக் கொள்ளப்படும்.

*கேள்வி :* வேறு ஏதாவது காழ்ப்புணர்ச்சி இருக்கிறதா? வேறு நோயாளிகள் இதனால் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறதா?

**துணை முதலமைச்சர்:** விசாரித்துக் கொண்டிருக்கிறோம். அதுபோல எதுவும் இல்லை. மற்ற நோயாளிகள் பாதுகாப்பாக இருக்கிறார்கள்.

முதல் priority மருத்துவர் பாலாஜி அவர்களுக்கு சரியான சிகிச்சை அளித்து அவரை மீட்டெடுப்பதுதான் முதல் priority. அனைத்து மருத்துவர்களுக்கு தகுந்த பாதுகாப்பை இந்த அரசு வழங்கும்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேட்டியளித்தார்.

### தேர்தல் களத்தில்

# தி.மு.க.வின் இளம் பேச்சாளர்கள் பட்டாளம்!

## ‘தி இந்தியன் எக்ஸ்பிரஸ்’ நாளேடு சிறப்புக் கட்டுரை!

**Ahead of 2026 polls, DMK readies army of young orators to win over people's hearts**

K EZHILARASAN @ Trichy

THE DMK, whose leaders are known for their gift of the gab', seems to be upping its game as the party has handpicked and groomed 182 young orators to campaign for the party in the 2026 Assembly elections. These speakers have been selected after multi-level competitions and training camps from a total of 17,000 aspirants.

Since its initial days, DMK grew in Tamil soil through its leaders' speeches and writings. Many of its leaders were fiery orators who could captivate the masses through their literary and emotional oration. DMK founder CN Annadurai described EVR Periyar's public meetings as "Tamil Nadu's first evening colleges". Late DMK leader K Anbazhagan, in a book, equated 'speech' to 'service' (*thondu*).

To reclaim the party's peerless distinction in public speaking, DMK president and Chief Minister M K Stalin tasked deputy CM and youth wing secretary Udhayanidhi Stalin to infuse fresh blood into the art by identifying 100 young orators. Since last June, DMK youth wing functionaries have been reaching out to colleges for their Kalaignar Karunanidhi centenary speech competition titled "*En Uyirinum Melana*" — the Tamil words with which the late Dravidian leader used to begin his speeches.

DMK youth wing state deputy secretary S Joel said 85 judges at the district-level selected 913 orators, who attended training camps that featured classes from Dravidian ideologues and renowned orators, and received books to read. The 913 contestants received a cash prize of ₹10,000 each.

After the training camps, 182 orators were selected for the state-level competition held on October 26 in Chennai. The next day, Stalin distributed ₹3 lakh, ₹2 lakh and ₹1 lakh cash prizes to the top three orators.

Nanjil Sampath, a popular orator, said, "As far as I know, no political party in India has organised an orator selection of this size in one go. At a time when public stage speaking in Tamil is facing a crisis, the DMK has rejuvenated it with a force of 182 speakers, providing them the status of headquarters orators. I am sure they will play a significant role in DMK's win in 2026 elections."

I am sure these young orators will be playing a significant role in DMK's win in 2026 elections — Nanjil Sampath

P3

**திருச்சி, நவ.15- ‘வாக்காளர்களின் இதயங்களை வெல்ல, தேர்தல் களத்தில் இளம் பேச்சாளர்களை இறக்கி, 2026 சட்டமன்றத் தேர்தலை தி.மு.க. சந்திக்கிறது’ என்று ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ (திருச்சி பதிப்பு) நாளேட்டில் Ahead of 2026 polls, DMK readies army of young orators to win over people's hearts என்ற தலைப்பில் வெளியாகி உள்ளது.**

அதன் தமிழாக்கம் வருமாறு :-

மேடைப் பேச்சில் வல்லவர்கள் என்று கருதப்படும் தி.மு. கழக தலைவர்கள் வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் கட்சிக்கு வலுசேர்க்கும் வகையில் மேலும் 182 இளம் பேச்சாளர்களை தேர்ந்தெடுத்துள்ளனர். மொத்தம் 17000 பேரில், பல கட்டப் போட்டிகள் மற்றும் பயிற்சி முகாம்களில் பங்கேற்ற பின் இந்த 182 இளம் பேச்சாளர்கள் தேர்வாகி உள்ளனர்.

தி.மு.க. அதன் தொடக்க காலத்திலிருந்தே தமிழ் மண்ணில் அதன் தலைவர்களின் பேச்சு மற்றும் எழுத்து மூலம் வளர்ந்தது. அதன் தலைவர்களில் பலர் தங்கள் இலக்கிய மற்றும் உணர்வுப்பூர்வமான சொற்பொழிவுகளின் மூலம் மக்களைக் கவரக்கூடிய அக்கினி பேச்சாளர்களாக இருந்தனர். தி.மு.க. நிறுவனர் அண்ணா, தந்தை பெரியாரின் பொதுக்கூட்டங்களை “தமிழகத்தின் முதல் மாலை நேரக் கல்லூரிகள்” என்று வர்ணித்தார். மறைந்த திமுக தலைவர் பேராசிரியர், ஒரு புத்தகத்தில், ‘பேச்சு’ என்பதை ‘சேவை’ (தொண்டு) என்பதற்கு சமம் என்று குறிப்பிடுவார்.

100 இளம் பேச்சாளர்களை அடையாளம் கண்டு கட்சிக்கு புது ரத்தம் புகட்டி ஒப்பற்ற தனித்துவத்தை மீட்டெடுக்க துணை முதல்வரும், இளைஞரணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலினைப் அக்கட்சியின் தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் பணித்தார். “

“கடந்த ஜூன் மாதம் முதல், திமுக இளைஞரணி நிர்வாகிகள் கலைஞர் கருணாநிதி நூற்றாண்டு விழா பேச்சுப் போட்டிக்காக கல்லூரிகளுக்குச் சென்று “என் உயிரும் மேலான” என்ற தலைப்பில் மறைந்த கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், தனது உரையைத் தொடங்கும் போது பயன்படுத்திய தமிழ் வார்த்தைகளையே பயன்படுத்தி வருகின்றனர்.

மாவட்ட அளவில் 913 பேச்சாளர்களை 85 நீதிபதிகள் தேர்வு செய்ததாக திமுக இளைஞரணி மாநில துணைச் செயலாளர் எஸ்.ஜோயல் தெரிவித்தார். பட்டியலிடப்பட்ட போட்டியாளர்கள் பயிற்சி முகாம்களில் கலந்து கொண்டனர், அதில் திராவிட சித்தாந்தவாதிகள் மற்றும் புகழ்பெற்ற பேச்சாளர்களின் வகுப்புகள் இடம்பெற்றனர். மேலும் படிக்க புத்தகங்களைப் பெற்றனர், என்றார். போட்டியில் பங்கேற்ற 913 பேர் தலா ரூ.10,000 ரொக்கப் பரிசாக அந்தந்த மாவட்டச் செயலர்களிடம் இருந்து பெற்றனர்.”

“பயிற்சி முகாம்களுக்குப் பிறகு, மண்டல அளவிலான போட்டிகள் நடத்தப்பட்டு, அக்டோபர் 26ஆம் தேதி சென்னையில் நடைபெற்ற மாநில அளவிலான போட்டிக்கு 182 சொற்பொழிவாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். மறுநாள் முதல் மூன்று சொற்பொழிவாளர்களுக்கு தி.மு.க. தலைவர் ஸ்டாலின் ரொக்கப் பரிசுகளை வழங்கினார்.

சொற்பொழிவாளர் நாஞ்சில் சம்பத், இதுபற்றி குறிப்பிடும் போது “எனக்குத் தெரிந்தவரை இந்தியாவில் எந்த ஒரு அரசியல் கட்சியும் ஒரே நேரத்தில் இந்த அளவு பேச்சாளர் தேர்வை ஏற்பாடு செய்ததில்லை. பொதுமேடையில் தமிழில் பேசுவது நெருக்கடியை எதிர்நோக்கும் நேரத்தில், 182 பேச்சாளர்களைக் கொண்டு அதற்குப் புத்துயிர் அளித்து, அவர்களுக்கு தலைமையகப் பேச்சாளர் அந்தஸ்தை வழங்கியது தி.மு.க.தான். 2026 தேர்தலில் திமுகவின் வெற்றியில் இந்தப் பேச்சாளர்கள் முக்கிய பங்கு வகிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்” என்றார்.

இந்த சொற்பொழிவாளர்கள் திராவிடச் சித்தாந்தம், கொள்கைகள் மற்றும் திமுக அரசின் சாதனைகளை பொதுக்கூட்டங்களில் பிரச்சாரம் செய்வார்கள். முதல் பரிசு பெற்ற மோகந்தி, ஏற்கனவே ஐந்து பொதுக்கூட்டங்களில் பேசியுள்ளேன் என்றார். 23 வயதான இவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் இளநிலை வழக்கறிஞர். மூன்றாம் பரிசு பெற்ற தஞ்சாவூரைச் சேர்ந்த வியானி விஷ்வா (24) ஆறு கூட்டங்களில் பேசியிருக்கிறார். இந்த 182 சொற்பொழிவாளர்களின் தொடர்பு விவரங்கள் அடங்கிய கையேடுகள் கட்சியின் மாவட்ட நிர்வாகிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன”.

இவ்வாறு அந்த நாளேட்டில் சிறப்புக் கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது.



நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில் மேட்டுக்குப்பம், சந்தைவெளி பேட்டை, கிராமங்களில் இருந்து அ.தி.மு.க.,பா.ம.க.,தே.மு.தி.க., த.வா.க. உள்ளிட்ட மாற்றுக் கட்சியினர் சபா .இராஜேந்திரன் எம்.எல்.ஏ முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். ஒன்றிய கழக செயலாளர் குணசேகரன், ஒன்றிய பொருளாளர் ஐயப்பன், துணைச் செயலாளர் ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் அறிவழகன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கழகத்தில் இணைந்த மாற்றுக் கட்சியினர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ. பெரியண்ணன்

**நவம்பர் 15 (1996)**



புதுக்கோட்டை மாவட்டக் கழகச் செயலாளராக 1974ஆம் ஆண்டு முதல் பல்லாண்டு காலம் தொடர்ந்து பணியாற்றியவர்.

நெருக்கடிநிலையின்போது மிசாவில் கைதாகி ஓராண்டு சிறையில் இருந்தவர்.

இருமுறை சட்டப்பேரவை உறுப்பினராக திறம்பட பணியாற்றியவர்.

1996ஆம் ஆண்டு கழக ஆட்சி அமைந்தபோது அரசின் கொறடாவாக பணியாற்றினார்.

“அந்தோ, புதுக்கோட்டை பெரியண்ணன் மறைந்தார். இது செய்தி அல்ல. என் இதயத்தில் மட்டுமல்ல கழக உடன்பிறப்புக்கள் எல்லோரின் இதயத்திலும் மூண்டுவிட்ட செந்தீ! இளமை முதல் நெருப்பாற்றில் நீந்தி பெரியாரின் கொள்கைகளை, அண்ணாவின் கோட்பாடுகளைக் காத்த மாவட்டத்தின் புலிப்போத்து அவர்” என்று தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் இவருக்கு தலைமைக் கழகத்தின் சார்பில் ‘அண்ணா விருது’னை வழங்கி சிறப்பித்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**